பதிவு அஞ்சல் ஒப்புகை அட்டையுடன்

அனுப்புநர்:
திருமதி.ச.வித்யா., பிஇ., எம்.பிளான்.,
உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
F பிளாக், 4 வது தளம்,
மாவட்ட ஆட்சியர் வளாகம்,
இராணிப்பேட்டை மாவட்டம் -632 401.
மின்னஞ்சல்.dtcprpt@gmail.com
தொலைபேசி-04172-290719

பெறுநர்
தலைவர்,
பள்ளூர் ஊராட்சி/கிராமம்,
நெமிலி ஊராட்சி ஒன்றியம்,
அரக்கோணம் வட்டம்,
இராணிப்பேட்டை மாவட்டம்.

நக.எண். RPT/KCYWV9FA/576802026/TCP **நாள்.19.06.2026**

ஐயா,

பொருள்: மனைப்பிரிவு – மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் – இராணிப்பேட்டை மாவட்டம்- அரக்கோணம் வட்டம், நெமிலி ஊராட்சி ஒன்றியம், பள்ளூர் ஊராட்சி/கிராமம், ச.எண்கள். 973/5B–இல் மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு: 8500.00 சமீ (ம) 2.10 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கியது – திருத்தம் செய்து வாசித்துக்கொள்ளுதல் - தொடர்பாக.

பார்வை:
1. On 25.11.2025, Applicant's Mr. Suresh and Mr. Govindarajan Online Application Form were received through Online
2. Application Number: KCYWV9FA.
3. The Assistant Director, District Town and Country Planning Office, Ranipet had issued Planning Permission vide Letter No: RPT/KCYWV9FA/576802026/TCP on 12.01.2026..

******

பார்வை 2-இல் காணும், மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடிதத்தில் இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் வட்டம், நெமிலி ஊராட்சி ஒன்றியம் – பள்ளூர் ஊராட்சி/கிராமம் - ச.எண்கள். 973/5B-இல் மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு: 8500.00 சமீ (ம) 2.10 ஏக்கர் –க்கு குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க ஒப்பதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் ஒதுக்கிய மனைகள் 48 மனைகள் என்பதற்கு பதிலாக ஒதுக்கிய மனைகள் 50 மனைகள் எனவும் மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ள மனை எண்கள்: 1 முதல் 48 வரை என்பதற்கு பதிலாக மனை எண்கள்:1 முதல் 50 வரை என திருத்தி வாசித்துகொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
இராணிப்பேட்டை மாவட்டம்.

நகல்
Mr. Suresh and Mr. Govindarajan,
Door No: 2, Vijayalakshmi Avenue,
S. K. Homes, Opp to Vijay Park,
Poonamalle,
Chennai - 600056.

நகர் ஊரமைப்பு இயக்ககம்
இராணிப்பேட்டை மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
நெமிலி ஊராட்சி ஒன்றியம்

இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் வட்டம், நெமிலி ஊராட்சி ஒன்றியம், பள்ளூர் ஊராட்சி/கிராமம், ச.எண்:973/5B-ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம்

கோப்பு எண் : RPT/KCYW/9FA/2025/57680 (திட்டமில்லாத பகுதி)

அளவுதிட்டம் : 1:800 (1மில்லிமீட்டர் = 0.08மீட்டர்)

குறிப்பு:

மனைப்பிரிவின் மொத்தப் பரப்பு : 2.10 ஏக்கர் (அ) 8500.00 ச.மீ

சாலையின் பரப்பளவு மற்றும் மூலை முடக்குகளின் பரப்பு மற்றும் பரப்பு உட்பட: 2477.475 ச.மீ (29.15%)

மனைப்பிரிவு சாலை போக மீதம் உள்ள பரப்பு : 6022.525 ச.மீ (70.85%)

மனைப்பிரிவு எல்லை .....

உத்தேச சாலை .....

நிலையில் உள்ள சாலை .....

கோரிய மனைகள் : 48 மனைகள்

ஒதுக்கிய மனைகள் : 48 மனைகள்

பொது ஒதுக்கீடு: உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கபட்டவை

உத்தேச சாலைகள் மற்றும் மூலை முடக்குகளின் பரப்பளவு : 2477.475 ச.மீ (29.15%)

சாலையின் மூலை முடக்கு 7.20மீ முதல் 12.00 மீ வரை : 1.5மீ X 1.5மீ

(TNCD & BR 2019, விதி எண் : 47 (8)-ன் படி உள்ளாட்சி (ம) TANGEDCO-க்கு தானமாக ஒப்படைக்க வேண்டிய 1% ஒதுக்கீடு ஒப்படைப்பு செய்யப்பட்டவை)

1.உள்ளாட்சிக்காக பொது உபயோக ஒதுக்கீட்டின் பரப்பளவு (A) : 41.25 ச.மீ - 0.54 %

2.தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கான ஒதுக்கீட்டின் பரப்பளவு (TANGEDCO)(B) : 41.25 ச.மீ-0.61 %

நிபந்தனைகள்:-

1. அரசாணை எண்: 18,ந.நி.(ம)கு.வ(ந.ப.1) துறை நாள்: 04.02.2019, அரசாணை எண்: 16 ந.நி.(ம)கு.வ(ந.ப.1) துறை, நாள்:31.01.2020-ன்படியும் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்:4367/.2019-பி2, நாள்:05.02.2020 மற்றும் அரசாணை எண்.181, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை. நாள்.09.12.2020-ன்படி உத்தேச மனைப்பிரிவில் அமையும் மனைப்பிரிவு சாலை, பொது உபயோகத்தினை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் உபயோக ஒதுக்கீட்டினை மின்சார வாரியத்திற்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்கண் அரசாணைகளின் படி உத்தேச சாலைகளை நிரவாக அதிகாரியால் நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கும், அகலத்திற்கும் தார் சாலையாகவும், தேவையான அடிப்படை வசதிகளை இடத்தில் மனைப்பிரிவு உரிமையாளரால் அமைக்கப்பட்ட பின் அதனை உள்ளாட்சியால் உறுதி செய்து கொண்டு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் உள்ளாட்சியால் வழங்கப்பட வேண்டும்.

2. இம்மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் இடத்தில் எவ்வித நில ஆர்ஜித நடவடிக்கையும் இல்லை என்பதையும் எந்த துறைக்காகவும் நில ஆர்ஜித பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலரால் பெறப்படவில்லை என்பதையும் உள்ளாட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.

3. நிலஉரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதில் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டாலோ மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் இரத்து செய்யப்படும்.

4. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறை ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்களையும் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

5. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் முன்பு விண்ணப்பதாரரின் பெயரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில்நுட்ப அனுமதிதிட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்பித்த ஆவணங்களில் கிரயப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமை குறித்து தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முழுவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

6. நீதிமன்ற வழக்குகள் ஏதேனும் நிலுவையில் இருப்பின் இத்துறையின் மனைப்பிரிவு அனுமதி செல்லத்தக்கதல்ல.

7. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை எவ்வித மாற்றமும் விதிதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6x4 அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரகரிக்கப்பட வேண்டும்.

8. இம்மனைப்பிரிவில் இருந்து அருகில் உள்ள இடத்திற்கு செல்லும் வரைபடத்தில் காண்பிக்கபட்டுள்ள மனைப்பிரிவு சாலையின் குறுக்கே சாலையின் போக்கிற்கு பாதிக்கும் வகையில் சுற்றுச்சுவர் கட்டப்பட்டு இருப்பின் அதனை அகற்றப்பட வேண்டும்.

9. உத்தேச மனையிடம் நிபந்தனைகளின் அடிப்படையில் வழங்கப்பட்ட பட்டா அல்லது பஞ்சமி நிலம் ஆகிய வகைப்பாட்டில் ஒதுக்கப்பட்டிருப்பின் தங்களுக்கு வழங்கப்பட்ட அனுமதியினை எவ்வித முன்னறிவிப்பின்றி இத்துறையால் ரத்து செய்யப்படும்.

10. மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதலால் நிர்நிலைகளை (வாய்க்கால், ஆறு, ஏரி) பாதிக்கும் அம்சங்கள் ஏதும் அமையுமாயின் வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி இத்துறையால் ரத்து செய்யப்படும்.

11. மனுதாரர் மனைப்பிரிவில் அமைந்துள்ள உத்தேச சாலைகள் மற்றும் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட பகுதிகளை வருவாய் துறையில் உட்பிரிவு செய்த பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும். மேலும் மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலை அனைத்தும் அருகே அமைந்துள்ள இடத்திற்கு செல்லும் வகையில் பாதிப்பின்றி பராமரிக்கப்பட வேண்டும்.

12. The Tamilnadu Government in G.O.(Ms).No.112, Housing and Urban Development Dept Dated: 22.06.2017 have approved the Tamilnadu Real Estate (Regulation & Development) Act 2016. The Promoter has to advertise, Market, Book, Sell or Offer for Sale , or Invite persons to purchase in any manner, any plot, any apartment or Building, as the case may be in Real estate project or part of it only after registering the real estate project with the Real estate Regulatory Authority.

13. The Necessary Charges to be collected as per G.O. (M.s). No. 79, Housing & Urban Development Department (UD4(3)), dt. 04.05.2017.

ம.வ/மா.ந.ஊ.அ.(ரா.மா.)எண்: 04/2026

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
இராணிப்பேட்டை மாவட்டம்

A.R.GOKILA VANI
Signature வரைவாளர்/உதவி வரைவாளர்

V.KRISHNA PANDIAN
வரைவாளர் நிலை-3

S.SHANTHI
மேற்பார்வையாளர்/வரைவாளர் நிலை-2

